**நாத்தாண்டிய பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாத்தாண்டிய பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாத்தாண்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(IV) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்றில் முன்னைய ஆண்டுக்கான செம்மையாக்கல்களாக ரூபா 5,291,994 செம்மையாக்கப் பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியின் தன்மை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் தேறிய சொத்துக்களின் மாற்றங்களை நிதிக்கூற்றுக்களில் விசேட வெளிப்படுத்தல்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெறுமதியின் தன்மையை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடுகின்ற அனைத்து புள்ளி விபர ரீதியான தகவல்களுக்காக கடந்த காலப்பகுதியின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட பெறுமிகள் | எதிர்காலத்தில் அத்தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடந்த காலப்பகுதியின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஆதனம், பொறி உபகரண பதிவுகளுக்குரிய சேர்த்தல்கள் மற்றும் நீக்குதல்களை உள்ளடக்கிய பெறுமதிக்காக ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | சபையின் நிலுவை வாடகை பொதுக் காணிகள் வியாபார வரி, மதிப்பிழந்த காசோலைகள், ஏனையநிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அத்தகவல்களை விசேட வெளிப்படுத்தல்களின் கீழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கணக்காய்விற்குத் தயவாகத் தெரிவிக்கின்றேன். | ஆரம்பிக்கப் பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி சேர் வரிக் (VAT) கணக்கில் ரூபா 5,009,985 வரவு மீதி காணப்பட்டதுடன் அம்மீதி தொடர்பாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து இப்பெறுமதி தொடர்பான உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொண்டு அல்லது விசாரணைகளை மேற்கொண்டு எதிரீடு செய்வதற்கு இடமளிக்காது பெறுமதி சேர் வரிக் கணக்கின் மீதியாக உரிய பெறுமதி நாட்குறிப்புப் பதிவின் மூலம் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் விசாரணைகள் மேற்கொண்டு வழங்கப்படுகின்ற பதில்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதேச சபையினால் நீண்டகாலமாக பயன்படுத்தி வருகின்ற நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள 10 ஏக்கர் 07 பேச்சஸ் அளவான 10 காணிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்க வில்லை. | காணிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 48,000,000 கூட்டு மொத்தமான 02 ஏக்கர் அளவான காணிகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | காணிகளின் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 746,571 மொத்த பெறுமதியான சொத்துக்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதாகத் தெரிவிக்கின்றேன். | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கொடுத்தோராகக் காட்டப் பட்டு மீளாய்வாண்டில் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 1,749,320 மொத்தப் பெறுமதியான சொத்துக்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்களுக்காக 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டது என்பதனால் அச்சொத்துக்கள் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கின்றேன். | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் களஞ்சியத்திற்கு சொத்துக்கள் கிடைத்திருந்த தனால் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | பிரதேச சபை புதிய தலைமை அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் புதிய கொம்போஸ்ட் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 33,837,329 பணம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | செலவு செய்யப்பட்ட பணத்தை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவு செய்யப்பட்டுள்ள அனைத்து செலவுகளையும் மூலதனமாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 14,726,722 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகளைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் மாகாண இறைவரித் திணைக்களத்திடமிருந்து பணத்தை பதிவு செய்த பிரதி கிடைத்திருக்காததுடன் 2021.02.03 ஆந் திகதி அப்பிரதி கிடைத்திருந்ததனால் ரூபா 7,229,713 பெறுமதி மாத்திரம் கணக்குகளில் செம்மையாக்கப்பட்டிருந்தது என தெரிவிக்கின்றேன். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1 ஆம் பிரிவு | இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 ஊழியர்களிடமிருந்து ஊழியர் கடனாக ரூபா 361,630 கடன் மீதி அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | நிலுவைக் கடன் மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதியை விரைவாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 106,000,263 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 135,454,187 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் ஏக்கர் வரியும் | | |
| | வீதவரி மற்றும் ஏக்கர் வரி மீதியான ரூபா 13,244,323 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்று நோயின் காரணமாக ஆண்டு முழுவதும் வருமானத்தை சேகரிப்பதற்கு தடை ஏற்பட்டுள்ளதனால் வருமானத்தை சேகரிக்கும் செயல் முன்னேற்றம் வீழ்ச்சியடைந்துள்ளது என தெரிவிக்கின்றேன். | ஆண்டின் போது பட்டியலிடப்பட்ட வருமானத்தை ஆண்டின் போதே அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | நிலுவையான கடை வாடகை மற்றும் குத்தகை வாடகை மீதியான ரூபா 1,030,102 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டின் போது பட்டியலிடப்பட்ட கடை வாடகையை ஆண்டின் போதே அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நீதிமன்ற தண்டமும் முத்திரைக் கட்டணமும் | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து முத்திரைக் கட்டணமாக ரூபா 110,000,000 பெற வேண்டியவையாக இருந்த போதிலும் அது அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மீளாய்வாண்டிற்கான அனைத்து தண்டப் பணத்தையும் முத்திரைக் கட்டணத்தையும் நாளதுவரையாக இனங்கண்டு அறவீடு செய்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2.04 ஹெக்டயர் அளவான மாவில கீனகெல்வத்த காணி முழுவதும் ஒரு ஹெக்டயருக்கு குறைவான வகையில் 02 அளவீட்டு படங்களாகத் துண்டு போடப்பட்டு தனியார் ஏலவிற்பனைக் கம்பனியால் 2019 ஒக்தோபர் 26 ஆந் திகதி கொள்வனவு செய்து காணியை துண்டு போடுவதற்காக பிரதேச சபையின் தலைவரிடமிருந்து அங்கீகாரம் 2020 மார்ச் 12 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. காணி முழுவதையும் துண்டு போடுவதற்காக 02 திட்ட வரைபடங்களைச் சமர்ப்பிப்பது தொடர்பான சட்ட விதிகளிலிருந்து விடுபடுவதற்காகச் செய்த முயற்சி எனவும் அதன் காரணமாக காணியிலிருந்து பொது வசதிகளுக்காக கிடைக்க வேண்டிய 64 பேச்சஸ் அளவான காணித்துண்டும் சபையினால் இழக்கப்பட்டிருந்தது. | இக்காணியிலிருந்து பொது வசதிகளுக்கான காணி துண்டை ஒதுக்கீடு செய்து கொள்வதற்கு நகர அபிவிருதிதி அதிகார சபையிடமிருந்து ஆலோசனை வேண்டப்பட்டிருந்த போதிலும் பொதுச் செயற்பாடுகளுக்காக காணிகளை ஒதுக்கீடு செய்தல் அவசியமற்றது என அந்த நிறுவனத்திடமிருந்து ஆலோசனை கிடைத்திருந்தது. | காணிகளை துண்டு போடுவதற்குரிய சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019-2020 காலப்பகுதியில் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து போட்டிகளில் வெற்றி கொள்ளுதல், ஊழியர் சன்மானம் போன்ற நடவடிக்கைகளுக்காக கிடைத்த ரூபா 360,338 பணம் அந்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாது கலப்பு வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அந்த வைப்புக்களுக்கு மத்தியில் விடுவிக்கக் கூடிய வைப்புக்களை விடுவிப்பதற்கும் மிகுதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக் கொள்கின்றேன். | வைப்பு பணத்தை விடுவிப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாரவில வாராந்த சந்தை மற்றும் நாத்தாண்டிய வாராந்த சந்தைக்காக குத்தகை உடன்படிக்கை செய்த போது நீர் கட்டணம், மின்சார கட்டணம் என்பன குத்தகைதாரர் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை உள்ளடக்கப்படாததனால் 2020 ஆம் ஆண்டில் நீர் பட்டியல் மற்றும் மின்சார பட்டியலுக்காக முறையே ரூபா 141,972 மற்றும் ரூபா 155,256 தொகைகள் சபை நிதியின் மூலம் செலுத்தப்பட்டது. | அவ்வாறான நிபந்தனை உரிய உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அந்த ஆதனங்களுக்குரிய குத்தகை உடன்படிக்கைகளுக்காக இந்த நிபந்தனையை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். | உடன்படிக்கை செய்யும் போது உரிய நிபந்தனைகளை உள்ளடக்கிய உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். |
| (ஆ) சபையின் இருப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 150,000 செலவு செய்து இருப்புக் கட்டுப்பாட்டு மென்பொருள் 2015 ஒக்தோபர் 12 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய நடவடிக்கை களுக்காக மென்பொருள் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | இருப்புக் கட்டுப்பாட்டு மென்பொருளுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 150,000 பணத்தை கழித்து மிகுதிப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | இருப்புக் கட்டுப்பாட்டு மென்பொருளுக் காக செலுத்திய பணத்தை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இஹல கட்டுனேரிய போகஹலந்த காணிக்காக 10 சதவீதம் அளவிலான பொதுக் காணித்துண்டு பௌதீக ரீதியாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் உத்தியோகத்தர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் புத்தள மாவட்ட திட்டமிடல் குழுவினால் காட்டப்பட்டிருந்த போதிலும் பிரதேச சபை அதனை | நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். | காணிகளை துண்டு போடுவதற்குரிய சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கவனத்தில் கொள்ளாது இக்காணியின் அளவீட்டுப் பெறுமதியில் 10 சதவீதம் அளவிலானதை வியாபாரப் பெறுமதிப் பணத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கொஸ்வாடிய மாரஹேனயா அகார ஏல விற்பனைக் காணியை துண்டு போட்டதில் 01 றூட் 4.30 பேச்சஸ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 சனவரி 13 ஆந் திகதிய கணக்காய்வு பரிசீலனை சந்தர்ப்பம் அளவில் துண்டு போடுதல் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அதன் போது பிரதேச சபை பொதுக் காணியினூடாக இருந்த 4.5 மீட்டர் அகலமான வீதியை நீடித்திருந்தமை காணக் கூடியதாக இருந்தது. 2019 மார்ச் 29 ஆந் திகதி துண்டு போடுகின்ற திட்ட வரைபடம் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை இணக்கப்பாட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இக்காணிக்காக 1 சதவீத வரியாக ரூபா 194,620 அறவிடப்பட்டிருந்தும் விற்பனைப் பெறுமதி தொடர்பான விபரம் ஏல விற்பனைதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இக்காணியின் மேற்குத் திசையில் அமைந்துள்ள காணிக்கு பயணம் செய்வதற்காக பிரதேச சபை பொதுக் காணியினூடாக இருந்த வீதியினை நீடித்திருந்ததுடன் இணக்கப்பாட்டுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறும் விற்பனை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உரிய வருமானதாரர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | காணியை துண்டு போடுவதற்குரிய சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1996 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய 935/6 ஆம் இலக்க 22(1)(இ) பந்தியின் பிரகாரம் பிரகாரம் பொதுச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற காணியின் அளவு 20 பேச்சஸ் இற்கு குறையுமாக இருந்தால் அதன் சந்தைப் பெறுமதியை அறவீடு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரின் | எதிர்காலத்தில் அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | காணிகளை துண்டு போடுவதற்குரிய சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பெற்றுக் கொள்ளாது மஹவெவ விலேச் காணியை துண்டு போடும் போது பிரதேச சபையின் வருமான பரிசோதகரின் அறிக்கைக்கு இணங்க சபைக்குச் சொந்தமான 15.3 பேச்சஸ் அளவானவை சபைக்குச் சொந்தமானது எனத் தெரிவித்து அதன் சந்தைப் பெறுமதி ரூபா 449,500 தொகை பற்றுச்சீட்டின் மூலம் சபை வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.